
பங்குனி - சித்திரை
2014

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் - 04 எழுத்து -24




## தடைகளைத் தகர்த்து தகவுகளைத்தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
(Poetry Magazine)

விலை 40/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எழுதலாம் – 24
மார்ச் - ஏப்ரல் 2014

ஆசிரியர்
**எஸ்.ஆர். தனபாலசிங்கம்**

படைப்பாளிகள்

| | |
|---|---|
| வேல்நந்தன் | அஷ்ரபா நூர்தீன் |
| கலாவிஷ்வநாதன் | க.யோகானந்தன் |
| ஏறாவூர் தாஹிர் | மருதூர் ஜமால்தீன் |
| விஷ்வமித்திரன் | பா.மதனரூபி |
| எஸ்தர் விஜித் | சூசை எட்வேட் |
| கே.ஆர்.திருத்துவராஜா | அத்தாஸ் |
| தம்பிலுவில்ஜெகா | தாமரைத்தீவான் |
| எஸ் திலகவதி | எஸ்.பி.பாலமுருகன் |
| ஷெல்லிதாசன் | ச.நிருஜன் |
| க.யஸ்வினா | குமார் கார்த்தீபன் |
| ச.திருச்செந்தூரன் | கவியன்னை |
| எஸ்.ஆர்.தனபாலசிங்கம் | கே.எம்.எம்.இக்பால் |

கருத்தாடற் களம் : ஏ.எம்.எம்.அலி
பார்வைக் குறிப்பு : வெல்லபதியான்
வாசகர் கடிதம் :
மூலமும் பெயர்ப்பும் : சி. சிவசேகரம்

அட்டைப்படம் : ஓவியர் கே. சிறிதரன்
வடிவமைப்பு : ச.திருச்செந்தூரன்

தொடர்புகளுக்கு
'நீங்களும் எழுதலாம்'
103/1, திருமால் வீதி, திருகோணமலை
தொ. இல. : 0778812912
0262220398
E-mail : neenkal@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
0
0
7

# நடிப்பு சுதேசிகள்

மார்ச் – ஏப்ரல்

நாடு பொருளாதார ரீதியாக அதல பாதாளத்துக்குச் சென்றுவிட்டது. விலைவாசி உயர்வைச் சமாளிக்க முடியாமல் நாளாந்தம் மக்கள் திண்டாடுகின்றனர். இந்நிலையிலும் இனரீதியான வக்கிர சிந்தனைகள் மேலோங்கி வருவதையே பத்திரிகைகளை, இலத்திரனியல் ஊடகங்களை பார்ப்போர் உணர்ந்து கொள்வர். வேறு எவ்வித பிரச்சினைகளும் இல்லையென்னுமாப்போல் அவை அமைந்துவிடுகின்றன.

யுத்தத்திற்குப் பின்னரான நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன. மீள் குடியேற்றம், நிவாரணம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை போன்ற மனிதாபிமான ரீதியான விடயங்களிற்கூட இழுபறிநிலை. மேலும் தம்மை நாட்டுப்பற்றாளர் களாகக் காட்டிக்கொண்டு மக்கள் ஐக்கியப்பட முடியாதளவுக்கு பல்வகையான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றனர். போதாக் குறைக்கு இடையிடையே கால அவகாசம் கோரும் பாசாங்குத்தனம் வேறு.

அதிகாரத்தில் இருப்பவர்களும் சரி, ஆதரவளிப்பவர்களும் சரி, அதிகாரத்துக்கு போட்டியிடுகிறவர்களும் சரி, ஒரே பாதையில் பயணிப்பவர்களாகவே உள்ளனர். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதான செயற்பாடு களாகவே உள்ளன.

மனித நேயத்தை ஊட்டி மானிடத்தை ஒன்று படுத்தும் ஆற்றல் கவிதைக்கு உண்டு. அந்த வகையில் கவிஞர்களின் பங்கு அளப்பரியது. ஒரு சிறிய இடைவெளி ஏற்பட்டமைக்காக வருந்துகிறோம். வாசகர்கள் படைப்பாளிகள் ஆதரவுடன் பயணம் தொடரும்.

தடைகளைத் தகர்த்து
தகவுகளைத் தேடி

அன்புடன்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சுயமிழந்து போகும் வாழ்வின் மீதான பாடல்*

சுயமிழந்து
போகிறதா
எமது சூழல்
மரமிழந்து போன
வெக்கை
வாழ்வு ஒரு புறம்
மறுபுறமோ
மனமிழந்து போன
வக்கிர வாழ்வு
இப்படியே போனால்
மிஞ்சப் போவது
மாயைகள் கலைந்து
நாம் துயில் எழுவது
எப்போது
பிஞ்சிலேயே
நஞ்சுகளாகிப் போன
வாழ்வு
வெம்பிப் பழுத்தபடி
நாளும்
நெஞ்சு பொறுக்க
முடியாக் காட்சிகளில்
நின்றழுகிறது
மனம்
தாய்மொழிப்
பற்றிழந்தோம்
தமிழ் வளர்த்தோரை
மறந்தோம்
கண்டதே
காட்சியாகிப் போனோம்
பசுமை வளர்த்த நினைவுகள்
இன்று பாலைவனமாய்
போவதற்கா
கடமை உணர்ந்து செயற்படுவோம்
கவலை மறந்து
வாழ்வதற்கே.

**புலோலியூர், வேல்நந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசகம்

சுடுவெய்யில் துளைத்தொழுகும்
வியர்வை மழை குளித்து
தீப்பற்றும் வயிற்றுப் பசிக்காய்
யாசிக்கும் பெண்!
துயரங்கள் கடந்தும்
உழைப்பின் வலி தாங்கியும்
தன் மனசடக்கிய பிச்சைக்காரி!

வெற்றுப் பாதங்களினூடு
வழியும் -
வியர்வையின் ஈரத்தில்
வாசிக்கப்படுகிறதவள் வறுமை!
பொறுமை பற்றிய
பாடம் கற்க
அவளுக்குள் நிறைந்து கிடக்கிறது
வரலாறு!

குளிர் உறைக்கும்
மழைப் பொழுதுகளிலும்
கரு சுமந்த வயிற்றுடன்
களைத்திருக்கும் அவளுக்காய்
ஒரு கவளச் சோறும்
சில்லறைகளும் தூவும் கரம்பார்த்து
காறித்துப்புகிறதென் தெருக்காற்று!

ஆசுவாசமாய் -
உட்கார்ந்தோர் பொழுதேனும்
குஞ்சுகளுடன் கூடிக்குலவும்
வக்கற்றுப் போனதவள் வாழ்வு.

இரண்டாம் மூன்றாம்
நான்காம் தடவையென
மதக்கடமை செய்ய
மக்கா பறக்குமென்
தேசத்து சீமான்களின்
தெருவோரப் பிச்சைக்காரி.

இவை போக,
இவள் யாசிப்பில் வயிறு வளர்க்கும்
ஊனமற்ற
ஈனக் கணவனுக்காய்
வருஷா வருஷம்
கருவும் சுமக்கும் காரிகை!

**—அஸ்ரபா நூர்தீன்—**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக் குரங்கு

மனக் குரங்கு
கிளைக்குக் கிளைதாவி
களைத்துப்போனது

அடர்ந்த, இருண்ட
அடவியிருந்து வெளியேறி
மனித தெய்வமாக
எண்ணமிட்டது.

தனது நிர்வாணத்தை
திரும்பிப் பார்த்து
நாணிக் கொண்டது.

நாடுகளுக்குள்
நாகரீகப் போர்வையில்
அழகுக்கு அழகு படுத்தி
நடமாடும் மனிதர்கள்

மோகலாகிரியில் மூழ்கி,
மும்மலங்களின் கட்டுக்குள்
மனித வர்க்கம்
யார் வல்லவன்? எனும்
போட்டியில்!

அதிகாரப் பரவலுக்கான
அடுக்கடுக்கான போராட்டங்கள்
மனித நாடுகள்
சுடுகாடாகிக் கொண்டிருந்தன.

மதங்கள் மதங்கொண்டு
மோதிக் கொள்கின்றன.
போரில்லா பூமி இல்லையென
புகன்றிடும் சரித்திரப் பக்கங்கள்

சுமைகளின் பங்காளிகளாய்
மௌனமான மக்கள்
அரக்கக்குணம் கொண்டவர்கள்
அரசு தர்பாரில்
அஜாரக அட்டகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகம், சமதர்மம்
சட்டம், திட்டம்
ஆள்வோரின் சர்வாதிகாரத்தின்
அடிவருடிகளாக

மனக்குரங்கு ஒரு கனம்
ஒருநிலைப்படுத்தி
உலகை உற்றுப்பார்த்தது

நாடா நமக்கெதற்கு
காடே சிறந்தது.
குரங்கு ஏற்காத கொப்பில்லை
விரைந்தே தாவியது.

— கலா விஸ்வநாதன் —

## *முகநூல் முடிவு*

இதயத்தில் பூட்டிய அன்பை
பொக்கிஷமாய் (ப்)
பூட்டி வைத்திருந்தேன்
தனிமையில் வாடிப்போய்
முகநூலால் சொல்லிவிட்டேன்
பெற்றோரும் மற்றோரும்
தூற்றித் திரிந்த போதும்
கலங்காமல் பயணம் செய்தேன்

உன் இருவிழிப்பார்வையின்
வசந்த வெளிச்சத்திற்காய்
காத்திருந்தபோது
என்னைச் சிதற வைத்தே
தூக்குக் கயிற்றை
முத்தமிட்டாய்
நிரந்தரமாய் எண்ணி


பழைமை பேசவந்தவரிடம்
துணிச்சலாய் பதிலளித்தாய்
மேலை நாகரிகத்தை
உள்ளங் கைகளுக்குள் தந்தேன்
மகிழ்வாய் ஏற்றாய்
வீணர்கள் பேசும்படியாய்
மின்மினியாய் மறைந்தாயே...


திரு. க. யோகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள்

# சூசைஎட்வேட்
# "இவன் தான் மனிதன்"
# சிறுகதை தொகுதி
# நூல் வெளியீட்டுவிழா





சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர் க.அருள்சுப்பிரமணியம், கலாசார உத்தியோகத்தர் க.அன்பழகன் கலந்துகொண்டனர். தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை, வாழ்த்துரை முறையே ந.நவசஞ்சிதா, க.பகீரதன், தாமரைத்தீவான் வழங்க திருமதி.சுகிலா ஞானராசா அறிமுகவுரையாற்றினார். முதற்பிரதியினை சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி பெற்றுக்கொள்ள, மதிப்பீட்டுரைகளை, ஷெல்லிதாசன், ஏ.எம்.எம்.அலி, திருமலைநவம் நிகழ்த்த நன்றியுரையினை ச.திருச்செந்தூரன் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விட்டில்கள்!

விட்டில்கள் தாம் நாங்கள்!,
இதிலென்ன சந்தேகம்?
தேர்தல் வரும் போதெல்லாம்
தேடி வரும் கூட்டத்தின்
வார்த்தைகளில் கட்டுண்டு
வாக்குகளை வழங்கி,
ஏமாறி, ஏமாறி
ஏமாற்றப்பட்டுவரும்....
விட்டில்கள் தாம் நாங்கள்!,
இதிலென்ன சந்தேகம்?
வார்த்தை ஜாலங்களில்,
வதன வசீகரத்தில்,
பொய்யான புன்னகையில்,
குசலம் விசாரிப்பில்,
அநுதாபப் பேச்சுகளில்,
இனவுணர்வு, மொழியுணர்வு,
மதவுணர்வுத் தூண்டல்களில்
மனதைப் பறிகொடுத்து,
எமக்குள் பிளவுண்டு,
எல்லாம் முடிந்த பின்னர்
ஏமாறி, ஏமாறி,
ஏமாற்றப்பட்டுவரும்.....
விட்டில்கள் தாம் நாங்கள்!
இதிலென்ன சந்தேகம்?
ஒரு முறையா? இருமுறையா?
ஓராயிரம் தடவை!
ரோஷத்தைக் கைவிட்டும்,
சோரம் போய் ஏமாந்தும்
வேஷங்களை நம்பி,
ஏமாறி, ஏமாறி
ஏமாற்றப்பட்டுவரும்........
விட்டில்கள் தாம் நாங்கள்!
இதிலென்ன சந்தேகம்?

— ஏறாவூர் தாஹிர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை முதல்

நேற்றுவரை
சுகயீனமுற்று
படுக்கையில் கிடந்தேன்

என்னைப் பார்க்க வந்த
அயல் நாட்டு
நண்பர் கூட
பரிதாபப் பட்டு
உதவி செய்தார்கள்

உள்நாட்டிலோ
என்னை
உதவாக்கரையாக
ஒதுக்கி
உழைப்பதிலேயே
இன்பம் கண்டவர்கள்
தமது
அரசியல் உடலையும்
போர்த்திக் கொண்டனர்

எனது மக்களையேனும்
நிம்மதிக்காற்றை
சுவாசிக்க விடாமல்
அகதிமுகாம்களிலும்
பாழடைந்த கட்டிடங்களில்
பனியிலும் மழையிலும்
பரிதவிக்க விட்டு
பாசமுள்ளவர்களாய்
பிறர்பார்க்க
நடித்துக் கொண்டார்கள்.

புயலுக்குப் பின்
அமைதியெனும்
பூரிப்பில்
நான்

ஆயினுமென்ன
தேசமென்ற என்னுடலை
தன் தேவைக்கு மட்டும்
அனுபவித்து
மீண்டுமொரு இனப்பகையில்
பேரினக்குளிர்காய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்திடுமுங்கள்
எண்ணக்குப்பையின்
இழிசெயல் கண்டு
வெட்கிக்கிறேன்

விடியும் காலங்களை
விழித்துப் பாருங்கள்
அநீதியுற்றோருக்கு
உதயமிருப்பதை
புலரும் பொழுதுகள்
புலப்படுத்துகின்றன.

-மருதூர் ஜமால்தீன்-

***********************************

## மலைதவழ் தென்றல் காற்று

மலைதவழ் தென்றல் காற்று
மறந்தது என்னை நேற்று
கலைதவழ் நெஞ்சக் காவில்
கவலையின் மலர்கள் பூக்க...

வானிலோர் மேகக் கூட்டம்
வழிதடுமாறிப் போகும்...
தேன் மழைத் துளிகள் வீணே
திரைகடல் மடியில் வீழும்...

நாடக ரசிகன் ஆனேன்
நடப்புகள் அனைத்தும் பார்த்தேன்
வாடுதல் ஒழிந்தேன் - வீணில்
வருந்துதல் மாயை என்றே

பாடலில் கவிஞன் என்றோர்
பாத்திரம் பொருத்தம் அல்ல...
வாடலே அதனதன் விளைவு
வருத்தமே கவிதைக் கனிவு...

நீள்துயர் கவியின் எல்லை...
நின் முகம் கனவுத் தொல்லை...
நாளொரு பண்புப் பிறழ்வு...
நலந்தரா நினைவுத் தளர்வு...


காதலின் இளமை நாட்கள்
கவின்தர கவிதை பூண்டேன்
வேதனை வடிகால் என்றே
நடப்புநாள் கவிதை கொண்டேன்...

நீண்டநாள் கவிதைத் தொடர்பு
நிலவுன்னால் தவிக்கும் உணர்வு
தாண்டொணா தடையாய் எரிவு...
தகிக்குதே மலருன் பிரிவு ...

-விஷ்வமித்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளவிழாவும் கலைஞர் கௌரவிப்பும்



நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாபூஷணம் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் பவளவிழாவும் கலைஞர் கௌரவிப்பும் நிகழ்வில் கேணிப்பித்தன் அருளானந்தம், கௌரவிக்கப்பட்ட கலைஞர்களான செ.விபுணசேகரம், ஆ.அசனார் J.P ஆகியோருடன் விருந்தினர்களான வலயக்கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஆ.ஜெகஜோதி, தி.திருச்செந்தில்நாதன், திரு.இராஜரட்ணம் (ஓய்வு நிலை அதிபர்) வே.பார்த்தீபன் (மக்கள் வங்கி), விக்னேஸ்வர அதிபர் திருமதி ஜ.எம்.முரளிதரன். ஓ.குலேந்திரன் (ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்), அதிபர், க. யோகானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூண்டுக்கிளிகள்

வாலிபத்து வனிதையர்கள்
வண்ண வண்ணக் கனவுகளோடு
ஆயிரம் சிறகு முளைத்து
அபூர்வப் பறவைகளாகின்றார்கள்

வசந்த காலத்துக் கனவுகளை
வளர விடாது தடுக்கின்ற
கல்யாணப் பேச்சுக்களும்
காசு நகை பேரங்களும்

மலர்கின்ற மங்கைப்பருவத்தை
மீண்டும் மொட்டாக்கும்
மூர்க்க சிந்தனைகளும்
மீட்சி இல்லா நரகங்களும்

காட்சிப்படுத்தப்படும்...
கொலுபொம்மைகளாய்...
இளமையும் அழகும் - இங்கு
மலினமாக்கப்படும் கொடுமை

தாயுடன் தந்தையும் - எம்மை
தம்முடன் அணைத்தே...
தங்கமே என கொஞ்சிய தாலோ
தங்க நகை கேட்டு
தண்டிக்கப்படுகின்றார்கள்

தங்கத்திலே குறியாயிருந்து
தங்க மனதைக் குதறுகிறார்கள் -
இதனால்
தினம் தினம் சில பெண்கள்
தீக்குளித்துக் கொண்டிருக்கின்றார்கள்

விலங்குகளை உடைத்து
வெளிவர முயல்கின்றார்கள் - ஆனாலும்
கூண்டுக்குள் அகப்பட்ட கிளிபோல
தவிக்கின்றார்கள் துடிக்கின்றார்கள்.

பா.மதனரூபி
அல்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுப்பு தேவதைகளின் காலம்

எளிமையான எனது வாழ்வின்
உண்மைகள் பற்றிய கவிதையை
மௌனங்களால் எழுதுகின்றேன்
பட்டாம் பூச்சிகளை சடாரென்று நசுக்கி
தூக்கியெறியும் துன் மார்க்க உலகத்தில்
வண்ணத்துப் பூச்சிகளின் கனவுகள்
அழகானவை
என கருத்துக்கள் என்னிடமுள்ளது.
இருப்பினும் நெருப்புப் பொறிகள்
சிதறிடும் காலங்கள் என் கைகளில்
சேமிக்கப்பட்டுள்ளது
காலத்தை தின்று வளர்க்கப்பட்ட
வெறும் அரசியல் வெட்டிக்
கதைகளால் காதுகள் செவிடாகி விட்டது
வியர்வையையும் பெரும் இரத்தமும்
கண்ணீரும் ஊறிய
கறுப்பு மண் தந்த மானுடத்திலிருந்து
நான்கு கைகள் கொண்ட தேவதையொருத்தி
எழுந்து வருகின்றாள்
அதர்மங்களை அழிக்க மந்திர வாளொன்றும்
அவளிடமிருந்தது
நீதியினிமித்தம் பசி தாகம்
கொண்டவர்களுக்கு
ஆறுதல் மொழிகளில்
பாடல் ஒன்றைப் பாடுகின்றாள்
சட்டங்களின் ஓட்டை வழியே சல்லாபிக்கும்
முதலாளித்துவ கொடும் வன் செயல்களை
வாள் கொண்டு வெட்டுகிறாள்
ஏழைச் சிறுவனின் காய்ந்துப் போன
சோற்றுத் தட்டை எடுத்துக் கொண்டு தேவதை
ஆடம்பர பங்களாக்களின்
பூந்தோட்டங்களில் நடக்கின்றாள்
திரும்பிய வரும் போது விதவிதமான
சோற்றுக் காசுக்கள் மின்னுகின்றன
தேவதையின் இதயத்தில் எரிமலைக்குழம்புகள்
கொதித்துக் கொண்டேயிருக்கின்றன
எரிமலை கொண்டு மின்சாரமற்ற
ஏழைக் குடிசைக்கு மெழுகுவர்த்தியாவது
ஏற்றத் துணிகிறாள்
துயிலுரிக்கப்பட்ட தன் இனத்தின் அழிவை
ஆன்மாக்களின் காற்றை
காற்று
மண்டலங்களில் உருட்டிச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தின் தளபதிகளின் மீது
மோதுகிறாள்
அதனை நின்று சுவாசித்தவர்கள் யார்?
பெரும்பாலோனோர்க்கு நுரையீரலே இல்லை
பகலின் இரவுகளில் நாடு கடத்தப்பட்டு
காடுகளின் சுதந்திர சிறைகளில் மனித
இயந்திரங்களாய் இரு நூற்றாண்டுகள்
இருளுக்குள் உழலும் மக்கள் கூட்டத்திடம்
கறுப்பு மண் தந்த தேவதை புறப்படுகிறாள்
எவனெவன் வாழ்வுக்கோ உதிரம் கொட்டி
உழைத்து மரிக்கும்
அறியாமைகளுக்கும்
அடிவருடிகளால் குருடர்களாக்கப்பட்ட
இனத்தின்
அவலங்களுக்கு ஒளிப்பிழம்பை
ஊற்றுகின்றாள்
தப்பி செல்ல முடியாத
அகதி முகாம்களின் விசும்பல்களை
பெரும் ஏக்க மூச்சையும்
சீசாவொன்றில் சேகரிக்கின்றாள்
அவள் இதயம் கவலைகளை
புதைத்து புதைத்து இடுகாடானது
இன்றிலிருந்து அதில் ஆந்தைகள்
குடியேறுகின்றன
மீண்டும் பாறையாய் இறுகிக் கிடக்கும்
இதயக் காடுகளில்
தேயிலைத் தோட்டத்தின் மூத்தவர்களின்
துயரங்களை பதுக்குகின்றாள்
உலக விழிகளால் மறுதலிக்கப்பட்ட
உள்ளூரின் சம்பூர் மண்ணினதும்
வன்னியின் இடுகாடுகளிலும்
கைவிடப்பட்ட மக்கள் கூட்டம்
தேவதையிடம்
எதையெதையோ எதிர்பார்க்கின்றது
அதன் காய்ந்து வறண்ட தொண்டைகளில்
தாகம், ஏக்கம், பசி, கனவு
விழிகளுக்கு மிக அருகாமையில் விழித்து
நிற்கும் பொறுப்புக்கள் கடமைகள் சுமந்து
கறுப்பு மண் தந்த தேவதை
காலத்தின் விடுதலை காண
பயணிக்கிறாள் பெரும் வேட்கையுடன்

எஸ்தர் விஜித்நந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெருக்குரல்

தேவைக்கு மீறிய பொருளும் திறமைக்கு
மீறிய புகழும்
அமைவது நன்மைக்கு ஆகா

◆◆◆◆◆◆◆◆◆

பரிசுத்தவான் ஆவதோ இறையருள்
கிடைப்பதோ கூட
முயற்சி இல்லாமல் வராது.

◆◆◆◆◆◆◆◆◆

தப்புச் செய்தவன் சமாளிக்க பேசும் பேச்சு
எப்போதும் அவனுக்கே புரியாது.

◆◆◆◆◆◆◆◆◆

மனிதனையே காண முடியவில்லை
அவ்வாறிருக்க
நண்பனைக் காண்பது எவ்வாறு?

◆◆◆◆◆◆◆◆◆

ஒட்டாமல் பழகி ஆராய்ந்து தெளிந்த பின்
நட்பைப் பேணுவது நலமே.

-சூசைஎட்வேட்-

******************************


## பொழிந்த மழையினால்


குடும்ப அட்டையில்
தவறிப்போனவர்கள்
எத்தனையோ நூறாகும்
மண்வெட்டியின்றி
மணலை வாரிவிட்டு
புதைக்கப்பட்ட உடல்கள்
கொடும் மழையினால்
புதை நிலம் கழுவப்பட்டு
உடற் கூறுகள்
எலும்பு கூடுகளாய்
அங்குமிங்குமாக மிதந்தன
ஓ... மழையே!
கோடி புண்ணியம் உனக்கு
பருவமடைந்த நெற்கதிர்களை
நீ... நீருக்குள்
சாய்த்த போதிலும்
எம் உறவுகளை
உடு புடவைகளினால்
அடையாளப்படுத்திச் சென்றாய்
பெருமழையே...
மீண்டும் வா...
உனக்கு எமது நன்றிகள்

[illegible] திருத்துவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு நிகழ்வு





நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் கலாபூஷணம் ஏ.எம்.எம்.அலி கலாபூஷணம் தா.பி.சுப்பிரமணியம் ஆகியோருக்கான பாராட்டு நிகழ்வு 11.08.2013இல் இடம்பெற்றது. பாராட்டுரைகளை முறையே மூதூர் முகைதீன் அவர்களும் திருமலை நவம் அவர்களும் ஆற்ற பாராட்டு பத்திரங்களை முறையே கலாசார உத்தியோகத்தர் வி.குணபாலா திருமலை நவம் ஆகியோர் வழங்கி வைத்தனர். சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஆ.ஜெகஜோதி, தி.திருச்செந்தில்நாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் பெற வாரீர்!

எங்கள் ஸ்தாபனம் பிரபல்யமானது
சங்கம் - அது அரச பதிவுள்ளது
அன்பளிப்புகள் வழங்குவோர் போற்றப்படுவர்
அன்பளிப்புப் பத்தாயிரத்துக்கு மேல் எனின்
தொகையைப் பொறுத்தே எமது பட்டம்,
பரிசில்கள்
தொல்லையேயின்றிப் பவிசு, பட்டம் பெறத்
தடை ஏதுமில்லை ஸ்ரீலங்கா மாமணி எனினும்
எம்மால் போற்றப்பட்டோர் அனந்தமுளர்
நம்மவர் பத்திரிகை, வானொலி,
தொலைக்காட்சியில்
நீவிர் பெறும் பட்டம் பரிசினைப்
பிரஸ்தாபித்திடுவர்
திகழும் லங்காபுரியில் சிங்கம், தமிழ்,
முஸ்லிம்
பாகுபாடு ஏதும் பார்த்திடாது பட்டம்
வழங்குவோம்!
அடுத்தவருடம் பரிசில், பட்டம் பெற
இவ்வருடம்
அள்ளி வழங்குவீர் நும் அன்பளிப்புக்களை
எதனையும் செய்து சாதனை படைத்திடல்
அவசியமன்று!
எவ்வாறும் வருடாந்தம் ஐம்பது பேர்வரை
எம்மால் கௌரவிக்கப்படுவதைக் காண்பீர்!
விளம்பரமின்றியே இவ்வேற்பாடு
நடைபெறலால்
பரம இரகசிமாய்ச் சமாச்சாரங்கள்
பேணப்படுகின்றன
பிரசித்தப்படுத்தி மாலை போட்டு வரவேற்புகள்
மிக ஜோராக நடத்தவும் ஏற்பாடுகள் உளவே
தனியாகவும் ஜோடி சேர்த்தும் பட்டம்
பெறலாம்
ஊர்வலமாய் அழைத்துச் சென்று
விழாவெடுப்போம்
பேராசிரியர், துறைசார்ந்தோர் உங்களைப்
போற்றிப்
புகழுரையாற்றி மகிழ்ந்திடுவர்
தொலைக்காட்சியில்
பகிரங்கமாகப் பார்த்திட வாய்ப்பும் உண்டே
பண்ணிய பயிர் புண்ணியம் காணப்
பார்த்து வருக. வருகவே! பட்டம் சூடிடவே.

வேலணையூர் – அத்தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் தங்கம்

ஓரிளவல், அவன் தன்னைக் கவிஞனாகக் கருதிக் கொள்பவன். பின் நவீனத்துவக் கவிதைப் பிரியன். தானே 'என் நவீனத்துவம்' என ஆக்கிக்கொண்டு எழுதுகின்றான். ஆனால் இன்னமும் தமிழ் மொழியிலுள்ள எழுத்து பேதங்கள் சரிவரத் தெரியாது. அறிந்து கொள்ள முற்படுவதுமில்லை. இவர்களால் தான் இன்று "வாலைப் பளம் அலுகி ஒளுகி கீலே விலுந்து கொண்டிருக்கின்றது".

**கிண்ணியா, ஏ.எம்.எம்அலி**

அந்தோ! இவனைப் போல இன்னும் சில பின் நவீனத்துவப் பிரகிருதிகள், சொல்லிலே நாருரிக்கின்றனர், கவிதை கட்டுவதற்காக!

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அந்தப்பின் நவீனத்துவப் பிரகிருதி நூலகத்தினுள் நுழைகின்றான். பசி கொண்ட ஆடு பசிய தளைகளைத் தேடி தேடிக் கடிப்பது போல பத்திரிகைகளின் பக்கங்களைப் பரபரவென்று புரட்டுகின்றான். கண்களை உருட்டுகின்றான். பாவம்! இன்றைக்கும் கவிதை வரவில்லை. கவலை தான் வந்தது. பத்திரிகை ஆசிரியருக்கு அந்தப் பின் நவீனத்துவக் கவிதை பிடிக்க வில்லையா? அந்தக் கவிதை மலர்தேன் பிழிந்ததில்லையா?

அவனுக்கு அனைத்து பத்திரிகைகளின் பக்கங்களையும் புரட்டிப் பார்த்து போதுமென்றாகிவிட்டது. "என்ன தம்பி நூலகத்திற்குள்ளே வந்தவுடனேயே திரும்பிப் போகப்போறீங்க" என்ற கேள்வி. அந்தப் பின் நவீனத்துவப் பிரகிருதியைப் பிடித்து நிறுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பாருங்களேன் ஒரு கவிதை எழுதியனுப்பி கிட்டத்தட்ட ரெண்டு மாதமாகப் போகிறது. இன்னமும் பிரசுரமாகவில்லை. இந்தப் பத்திரிகைக் காரனுக்கெல்லாம் கவிதை தெரியாது. அவன் தனது கவலை கலந்த கசப்புணர்வை என்னிடம் கொட்டினான்.

கவிதை யாருக்குத் தெரியாது என்பது அவனுக்குத் தெரியாது. அதனைத் தேடிக் கற்றுத் தீட்டிக் கொள்ளும் மனப்பக்குவமுமில்லை. ஆசையார்வ முமில்லை. பத்திரிகைக்கு கவிதை எழுதனும் அது உடனே வரணும் என்னும் பரபரப்புமட்டும் போதாது. நூலகத்திற்கு ள்ளே வந்தவனுக்கு அரைமணி நேரமாவது இருந்து படிக்க விருப்ப மில்லை. சரசரவென்று பத்திரிகையைப் புரட்டுவது பார்ப்பது! கவிதை வராத கவலையால் வேர்ப்பது! விர்ரென்று வெளியே விரைவது. இந்த இலட்சணத் தில் இந்தப் பின் நவீனத்திற்கு எப்படிக் கவிதை பிறக்கும்? அது, எப்படி இவனுக்கூடாகச் சிறக்கும்?

ஆனால், இவ்விளவல் அவனைக் கவிஞனாகக் கருதிக் கொள்கிறான். இந்தக் கருதுகோள் கனதி பெற வேண்டுமெனில் இவன் என்ன செய்ய வேண்டும். செய்ய வேண்டியதை அவனது சிந்தனைக்கேவிட்டு வைப்போம். கவின்கலையாகிய கவிதைக் கலையும் கருவிலே அமைந்த திருவென்பதாக இருப்பினும் பயிற்சியாலும், முயற்சியாலும் பாவலன் ஆக முடியாதா?

தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்” அல்லவா? கவிதை எழுதிப் படிக்காத கலையன்று ஆகவே அது கருவிலே அமைந்த – அமையாத திருவாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொதுவிலே கவிதைக்கான புலமை வரவேண்டின் வெறுமனே புரட்டுவதொடு மட்டும் நிற்காமல் கவிதை ஞானத்தைத் திரட்டுவதிலே திறன் கொள்ள வேண்டும்.

கல்லில் சிலையைக் காண்பது போல், சொல்லிலே கவிதைக் கலையைக் காணவேண்டும்.

நவீனம், பின்நவீனத்துவம் என்றெல்லாம் வந்த பிறகு கவிதையை யாரும் எழுதலாம் என்னும் நிலைமை தோன்றி விட்டது, எழுதுபவர்கள் எல்லோருஞ் சோர்வின்றி எழுதட்டும். 'நீங்களும் எழுதலாம்' என்று எழுதுபவர்க்கெல்லாம், 'நீங்களும் எழுதலாம்' போன்ற கவிதைச் சிற்றேடுகள் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றன.

களங்கிடைக்குதுதானே என்பதற்காகக் கவிதை எழுத வேண்டாம். பத்திரிகை களை, சஞ்சிகைகளை புரட்டிப் பார்த்துப் பார்த்து பொறுமை இழக்க வேண்டாம். 'கறுப்புத் தங்கத்தை' அரேபிய மண்ணில் இருந்து தோண்டி எடுப்பதுபோல் எங்கள் பகுதிகளில் உள்ள நூல் நிலையங்களி லிருந்தும் கவிதைத்தங்கத்தை அகழ்ந்து எடுக்கலாம். முயற்சி தான் தேவை.

கட்டாயங் கவிதைத்தங்கம்தேடுபவர்க ளுக்குக் கிடைக்கும். நீங்கள் எல்லாம் கவிதைச்செல்வந்தர்கள் தாம்.

**படைப்பாளிகளின் கவனத்திற்கு!**

படைப்பாளிகளின் வசதியிருப்பின் கணனியில் தட்டச்சு செய்து அனுப்புங்கள் அல்லது முழுமையான CR தாளில், A4 தாளில் தெளிவான கையெழுத்தில் எழுதி அனுப்புங்கள் கோவைப்படுத்துவதற்கும், எழுத்துப் பிழைகளினால் ஏற்படும் கருத்துப் பிழைகளைத் தவிர்ப்பதற்கும் உதவியாக இருக்கும்.

ஆ—ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் அவஸ்தை

கருவில் இருப்பது பெண் என்றால்
கருச்சிதைவு செய்யவும் துணிந்திடுவார்
உருவாகி வெளியில் வந்து விட்டால்
உடனே கள்ளிப்பால் கொடுத்திடுவார்.

பேதைப் பருவம் வந்துவிட்டால்
பாதை மாற்றித் தடை விதிப்பார்
பெதும்பை வயதை அடைந்தால்
அரும்பும் உணர்வுக்கு அணையிடுவார்.

மங்கைப் பருவம் மலர்ந்த போது
மனதில் சுமைகள் ஏராளம்
மடந்தையாக வளர்ந்த வேளை
மடங்கும் திறமை இல்லத்துள்

அரிவைப் பருவம் அடைந்தாலோ
அடக்கு முறைகள் ஏராளம்
தெரிவைப் பருவப் பெண்ணுக்கு
தொல்லை பலவும் வந்து சேரும்.

பேரிளம் பெண்ணின் இறுதிவரைக்கும்
பிள்ளைப் பேறு இல்லையென்றால்
பாரினில் பெண்கள் படும் அவஸ்தை
பாவில் சொல்ல முடிவதில்லை.

தம்பிலுவில் ஜெகா

கவிதைத்தொகுதிகள்
பற்றிய அறிமுகக்குறிப்புக்கள்
அடுத்த இதழிலிருந்து
இடம்பெறும்.

படைப்பில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள் படைப்பினைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

உங்கள் கருத்தாடலை எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடக்கிறோம்

ஒலியை வாங்கும் கருவியில்
ஓதுவார்கள் பகல் இரா!
கலியின் காலம் எனப்பல
கதையும் கட்டுவார்கள்!
மனித நேயம் உள்ளதாம் -
மடையின் சாம்பிராணி காள்
புனித நேயம் எங்குள?
போரும் புகையும் தான் உள!
விலங்கினின்று வந்தவர்,
விலங்கை நோக்கிப் போகிறார்
கலங்குவார்கள் ஒரு சிலர்
கத்துவார் நா காய்ந்திடும்!
ஆறு, ஏழாம் அறிவுகள்
ஐந்தைக்கூடக் காண்கிலோம்!
பேறு பெற்ற மாந்தராம்
பேச நாவு கூசுதே!
மொழிகள் பேச மட்டுமே
மொக்கருக்கு மதங்களேன்?
அழிவு எங்கும் அழிவுதான்
ஆக்கம் யாவும் அழிக்கிறார்
வந்தவன் வாழ் வோனையே
வதைத்தழித்து வாழ்கிறான்!
எந்தநாடு "சிங்கை" போல்
இணைத்தணைத்து வாழுது?
அரசியல்கள் சாக்கடை
அதிகாரம், ஆணவம்!
தரமிலார்க்கு வாய்ப்புகள்,
தரமுள்ளார்க்குச் சாக்களம்?
ஆட்டம் பாட்டு ஒருபுறம்
அகதி கஞ்சி மறுபுறம்
ஓட்டம் நீச்சல் ஒருபுறம்
உல்லாசங்கள் மறுபுறம்
வண்டி மாடும் உழைக்குதாம்
வண்டி உள்ளோன் தடவுறான்
கண்டு கொண்டிருக்கிறோம்
கதைக்கொணாதே ஊமைகள்
அறிவியல் வளருதாம்
அடக்குமுறையும் வளருதே!
பறிப்பவர் யாவும் வலுவுளார்,
பறிகொடுப்பர் மெலிவுளார்!
உண்மை அன்பு உள்ளதா?
உயர்ந்த பண்பு உள்ளதா?
நன்மை செய்தோர் தீமையை
நாட்டில் காணவில்லையா?
நீதி கீதி உள்ளதா?
நெறியில் யாவர் செல்கிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி — ஊர்தி போதுமா?
வெறி குறைந்ததில்லையே?
புதிய உலகம் செய் என
போரின் உலகைச் சாய் என
பதிவு செய்தான் புரட்சியின்
பாவின் வேந்தனானவன்!
நல்லவர்கள் கத்துவார்
நடப்பதொன்று மில்லையே?
வல்லவர்கள் தீதையே
வழங்கி வாழ்ந்து கொள்கிறார்!
எப்படியோ வாழுமின்
இறந்து போகும் வரையிலும்
இப்படியே நாங்களும்
இறந்த வண்ணம் கிடக்கிறோம்.

'தாமரைத் தீவான்'

---

## அத்திவாரத்தின் சில வரிகள்

மனிதங்களை தேடவேண்டிய
பயணத்தில்
களைப்படைந்து
எழுதுகிறேன்

சந்தர்ப்ப வாதங்கள்
கொண்ட
பச்சோந்திகளின்
நடுவே நானும்
அமர்ந்து பொன்னாடை
தேட ஆசையில்லை

தரிசு நிலங்களையும்
பாலைநிலங்களையும்
கொஞ்சம்
சோதனை செய்து
பயிர்களை பயிரிட
ஆசைப்படுகிறேன்

எல்லோரையும் போல
நமக்கென்ன என்று
இருந்தால்
நாளை என்பது
நரகமாகும்

எஸ். திலகவதி, பதுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிகழ்காலமும் இறந்த கால நிகழ்வும்

ஒரு நிகழ்காலத்தில்
ஒரு இறந்தகாலம்
தொடர்பான
பதிவு செய்கிறோம்

பெருங்கொரூரம்
நிகழ்ந்த
நிலம் பற்றி
வரலாறுகள்
உண்மைகளை
மீளவும் அசைபோட வேண்டும்

மறந்து விட முடியாது
மறைத்து விடவும்
முடியாது
எப்போதும் மனதில்
ஆழமாய்
மறைத்து
வைத்து விட வேண்டும்

குருதியில் கழுவப்பட்ட
நிலம் முழுவதும்
புதையுண்டு போன
உண்மைகள் எல்லாம்
எப்போதாவது
மீளவரும்

சாட்சியமில்லாமல்
அழிக்கப்பட்ட கனவுகள்
எங்கோ ஓர்
கவிதையின் மூலம்
பதியப்பட்டிருக்கும்

நிஜங்களுக்கு
தீர்ப்புகள் தேடும்
தருணத்தில்
சந்தர்ப்பவாதங்கள்
தூது போன
மனிதங்கள் பற்றி
கவலையாக உள்ளது.

எஸ்.பி.பாலமுருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீங்களும் எழுதலாம்" தரும் கவிவனம் - 23வது இதழ் பற்றிய ஒரு பார்வை

23வது இதழின் அட்டைப்படம் நீதி நியாயத்தை ஆழமாக வலியுறுத்தும் வகையில் - கண்கள் இரண்டும் கட்டப்பட்டு, கட்டுகளால் உடல் சுற்றப்பட்டு ஒரு கையிலே தராசினைத்தாங்கிய வண்ணமாக உள்ள பெண்மணியை அடையாளப்படுத்தி நிற்கின்றது. அவசியமான அட்டைப்படம் ஆசிரியருக்குப் பாராட்டுகள், அழகான — கருத்தாழம் மிக்க அட்டைப்பட ஒழுங்கமைப்பு — கே.ஸ்ரீதரனுக்கு வாழ்த்துக்கள்.

**கன்னிமுத்து வெல்லபதியான்**

ஆசிரியர் பக்கம், "தந்திரம் - அவதந்திரம்" என்னும் தலைப்பில் நேர் எதிர்க் கருத்துகளை நெத்தியடியாகக் கூறி நிமிர்வு பெறுகிறது. அதன் இறுதியிலே வரும் "...இவ்வகையான துர்ப்பாக்கியமான சூழ்நிலைகளை இன, மத, மொழி, பேதம் கடந்து படைப்பாளிகள் அம்பலப்படுத்த முன்வரவேண்டும். இது மானிடத்தை நேசிக்கின்ற படைப்பாளிகளால் மட்டுமே முடிகிற காரியம்..." எனத் தொடரும் ஆசிரியரின் அங்கலாய்ப்பானது கூர்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

இவ்விதழிலே எல்லாமாக 24 கவிதைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. தவிர, சூசை எட்வேட் அவர்களின் "தெருக்குரல்" ஐந்தும், தீரன் ஆர்.எம்.நௌஸாத் அவர்களின் "குறும்பாக்கள்" ஐந்தும் இடம் பிடித்துள்ளன. இடம் பெற்றுள்ள கவிதைகளை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கமுடியும்.

1. மிகச் சிறிய கவிதைகள்
2. சிறிய கவிதைகள்
3. சற்று பெரிய கவிதைகள்
4. பெரிய கவிதைகள்
5. தெருக்குரல்
6. குறும்பாக்கள்

மேற்கூறிய கவிதை வகைப்பாட்டுக்குள் பயில்களக் கவிதைகளும் காத்திரமான கவிதைகளும் மொழிபெயர்ப்புக் கவிதைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்படுகின்றன. ஈழத்தின் தமிழ் பேசும் சூழலைச் சேர்ந்த பல்வேறு "பாடு" பொருள்களைக் கருவாகக் கொண்ட 'நாற்றிசைக் கவிதைகளும்' இங்கே வந்து சங்கமித்துள்ளன. கவிதைகளில் இழையோடும் உணர்வோட்டங்களும், எழுத்தோட்டங்களும் வெவ்வேறு விதமாக வாசகர் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ளன. ஆங்காங்கே ஒரு சில எழுத்து, சொற்பிழைகளும் இடம் பெற்றுள்ளன. அவை அச்சாகும் வேகத்தில் ஏற்பட்ட அவசரமோ என எண்ணத்தோன்றுகின்றது.

மிகச் சிறிய கவிதைகள் வரிசையில் இரு கவிதைகள் வருகின்றன. ஒன்று, "கனல்" அதனை எழுதியவர் அக்கரை மாணிக்க வாசகம், அவர் அனுபவசாலி, ஆளுமை மிக்கவர் மற்றைய கவிதை "மௌனம்" அதனை எழுதியவர் தி/சண்முக இந்து கல்லூரி மாணவி க.தீபிகா இவர் வளர்ந்துவரும் இளம் பிஞ்சுக்கவிஞர். "மௌனம்" நல்லது தான். வாழ்த்துக்கள். இருந்தபோதும் ஒப்பீட்டுரீதியில் "கனல்" தரம் கூடியது பாராட்டுக்கள். "ஏழை மக்களின் வயிற்றுத் தீ (பசி) சம்பந்தப்பட்டவர்கள் வாழ்வில் நிச்சயம் ஒரு நாள் கனல் கக்கும்" என அக்கவிதை நிச்சயப்படுத்தி நிமிர்வு பெறுகிறது.

சிறிய கவிதைகளாக எட்டுக்கவிதைகள் இடம் பிடித்துள்ளன. குழந்தையை "அழகோவியமாக" ஜெனிதா மோகன் காண்கின்றார். அங்கதச் சுவையோடு ஆழ்ந்த கருத்தைத் தருவதான "இலக்கையடைதல்" கவிதையினை தி.பவித்ரன் தந்துள்ளார். பத்தாயிரம் சம்பளத்தோடு அலையும் பட்டதாரிகளின் பரிதாப நிலைப்பாட்டை "பத்தாயிரம்" என்ற தலைப்பாகவே தம்பிலுவில் ஜெகா ஏக்கத்தோடு படைத்துள்ளார். "மனத்தேசம்" ஊடாக நீதி மறுக்கப்பட்டதேசத்தில் தாய்க்குலம் படும்பாட்டை ச.சுகர்ணன் கண்ணகித்தாயிடம் சொல்லி அழுகின்றார்.

"சார்புக் கோட்பாடு" மற்றும் "கண்டதும் காதல்" இரண்டையும் பயில்களக் கவிதையாக வி.ஆர்த்திகா யாத்துள்ளார் பாராட்டுக்கள் "நாங்கள் கொடுத்த விலை" என்னும் மகுடத்தில் புலோலியூர் வேல்நந்தன் தன் உள்ளக்கருத்தினை ஓவியமாகத் தீட்டியுள்ளார். "எலும்பு பொறுக்கிய மண்ணில் இன்று இரும்பு பொறுக்கும் இதயங்களே..." என விழித்து அவர் கவிதையை நகர்த்தி வெற்றி பெறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருதுக் கவிஞர் பில்கிஜ் ஹுகு ருல் 'ஹஸன் எழுதிய கவிதையை (இருள்) சி.சிவசேகரம் மொழிபெயர்ப்புக் கவிதையாகத் தந்துள்ளார். "இருள்" என்ற அக்கவிதையில் வரும் "நீ இன்னமும் ஒரு மெழுகுதிரியை ஏற்றாததாலே தான் இருள் நிலவுகிறது, சோம்பிக்கிடவாதே ஒரு மெழுகு திரியை ஏற்று..." என்ற ஆரம்ப வரிகளே கவிதையை அசத்திவிடுகின்றது. யதார்த்தமான வரிகள் ஆழ்ந்த கருத்துக்கள். மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் எழுத்தோட்டம் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.

சற்று பெரிய கவிதைகளாக பதின்மூன்று கவிதைகளை அவதானிக்க முடிகின்றது. "நாங்களும் உன் படைப்புகள் தானே" — எஸ்.முத்துமீரான் எழுதியது. தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை இனங்களைப் பொதுமைப்படுத்தி அவ்விரு இனங்களின் உரிமைக்குரலாக இக்கவிதை எழுதப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். "வயோதிபம்" என்னும் தலைப்பில் நீ.பி.அருளானந்தம் அவர்கள் வயோதிப துன்பதுயரங்களை வடிவாக முன்வைத்துள்ளார்.

மருதூர் ஜமால்தீன் "பணம்" என்னும் தலைப்பில் பணம் தன் சுயத்தை சொல்வதாக கவிதை பாடியுள்ளார். நன்றாக உள்ளது நீலாபாலன் அவர்களோ மரணம் நிச்சயம் ஆனால் மனிதம் ஒரு போதும் மரணிக்காது என மார்பு தட்டிச்சொல்லுகின்றார். வரிக்குவரி அர்த்தங்கள் நிறைந்திருப்பதோடு, இறுதிப் பகுதியோ உச்சம்பெற்று நிற்கின்றது அஷ்ரபா நூர்தீன் விபத்திலே நிகழ்ந்த மரணமொன்றைப் பற்றி கண்கலங்க துல்லியமாகச் சொல்லுகின்றார்.

நிலாவெளியூர் ஜெகதர்மா "அ(தோ)கதி" என்ற தலைப்பில் அவுஸ்திரேலியா செல்லும் நம்மக்கள் படும் சொல்லொண்ணாத் துயரங்களை தன் கவிதை வரிசையாகச் சொல்லி முடிக்கின்றார். விஸ்வ மித்திரனின் "ஒரு கவிதை குலைகிறது" — கவிதையிலே தாங்கமுடியாத வெறுமையானது தாண்டவமாடுகின்றது.

"ஜனம் கேட்ட நியாயம் எல்லாம் பணம் கேட்டுப் போனதெங்கே?" என திருமலை யானந்தலிங்கம் மரபுக்கவிதையின் சாயலில் தன்கருத்தை கேள்வியாக கேட்கின்றார். பிணம் பார்த்தும் போகலையா? இனம் பார்த்த பிசாசு இன்னும்?" எனக் கேட்கும் வினாவில் எத்தனையோ அரத்தங்கள் பொதிந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்தர் விஜித் நந்தகுமார் "வேட்(கை)டை காலம்" என்ற கவிதை மூலமாக பிரிவு வலி பற்றி குறிப்பிடுகின்றார். "இங்கே குளிரும் இல்லை வெப்பமும் இல்லை", "கோபத்தீயில் உருகிய இரும்பு இருவேறு தண்டவாளங்களானது" ஆகிய அவரது வரிகள் சிந்திக்கத்தக்கவை. "இனியாவது ஒரு விதி செய்வோம்" என இதழின் வடிவமைப்பைச் செய்த டெ.பத்மபிரஷன் எல்லோரையும் அழைக்கின்றார். "இனப் படுகொலை செய்த கொடுங் கோடரி களுக்கு எவ்விதத்திலும் இனி இடங்கொடுப் பதில்லையென்று" உறுதிபட அவர் தெரிவிப்பது நியாயங்கள் நிறைந்தது.

இதே போன்று "உரிமைகட்காய் போராடுங்கள்" என்ற தலைப்பில் ஆங்கில மூலம் Bob marly எழுதிய கவிதையினை 24ம் பக்கத்திலே வீரப்பதி விநோதன் தமிழிலே – மொழிபெயர்ப்புக் கவிதையாகத் தந்துள்ளார். விறுவிறுப்பான வரிகள் நெஞ்சை நெருடுகின்றன. க.யோகானந்தன் வாசிப்பின் மகத்துவத்தைப் பற்றி "வாசித்து அறியும் அறிவு" என எழுதிய கவிதையும் வரவேற்கத் தக்கதாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இதழின் ஆசிரியர் எழுதியுள்ள "திருவுடையார் ஆடல்" என்ற கவிதை சம்பந்தப்பட்டோருக்கு பொருத்தமான சாட்டையடியாக விழுகிறது.

மேற்குறிப்பிட்டவற்றை விட பெரிய கவிதையாக சௌ.சந்திரகலா எழுதிய "ஜனனம்" என்ற கவிதை 19 – 20 ஆகிய இரு பக்கங்களிலே இடம் பெற்றுள்ளது. அரக்கர்களிடம் அகப்பட்டு மரணித்த ஓர் ஆத்மத்தின் மரணத்தை பரிதாபத்தோடு கூறி அவ் ஆத்மம் உண்மையிலே மரணிக்கவில்லை மனதிலே தினமும் ஜனனித்துக்கொண்டிருப்பதாக கவிதை உள்ளம் மன அமைதி பெறுகின்றது.

சூசை எட்வேட் அவர்களது தெருக்குரல், திரன்.ஆர்.நௌஸாத் அவர்களுடைய குறும்பாக்கள் ஆகியவைகளும் சிந்தனைக்குரியவை.

இவை தவிர, வதிரி சி.ரவீந்திரனின் "மீண்டும் வந்த நாட்கள்" கவிதை தொகுதி பற்றிய அறிமுகக் குறிப்பு, சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூரணம் சின்னையா குருநாதன் - பாராட்டு நிகழ்வு பற்றிய குறிப்பு, அஷ்ரபா நூர்தீனின் "ஆகக்குறைந்தபட்சம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை நூல் வெளியீட்டு விழா பற்றி குறிப்பு, சேனையூர் அச்சுதனின் "எங்களையும் இந்த மண்ணில் மனிதராக வாழ விடுங்கள்" கட்டுரை நூல் - வெளியீட்டு நிகழ்வுக்குறிப்பு, கொற்றை பி.கிருஷ்ணானந்தனின் "இன்னுமோர் உலகம்", அநாதரட்சகனின் "நிமிர்வு" ஆகிய சிறுகதை நூல் குறிப்புகள், வாசகர் கடிதங்கள் நிகழ்வுகளின் நிழற்படங்கள் ஆகியவையும் இடம்பெற்று இதழை நிறைவான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன.

இதேவேளை இவ்விதழ் மீதான ஒரு சில குறைபாடுகளையும், தவறுகளையும் சுட்டிக்காட்டுவதும் அவசியமாகும். ஒரு சில எழுத்து, சொற்பிழைகள் காணப்படுகின்றன. மரபுக் கவிதைகளும் மிக அரிதாகவே உள்ளன. பெண் கவிஞர்களின் கவிதைகள், கருத்தாடல்களும் குறைவாகவே காணப்படுகின்றன இவை தொடர்பிலும் கூடிய கவனம் எடுத்தால் இதழின் வளர்ச்சிக்கும், நிலைப்புக்கும் வரப்பிரசாதமாய் அவை அமையும் என்பதில் சந்தேகமில்லை. இலக்கியப் பெறுமதி மிக்க "நீங்களும் எழுதலாம்" இதழினை அனைவரும் சேர்ந்து மேலும் உயர்த்தி விடுவோமாக.

புனைபெயரில் எழுதுவோர் தமது
சொந்தப் பெயர் முகவரியையும்
குறிப்பிடுதல் வேண்டும்

**கவிதைக்கான**

பயில்களம்
பரிசோதனைக்களம்
காத்திரத்தின் களம்
கருத்தாடற்களம்
விளக்கக்களம்
விமர்சனக்களம்

**வாசகர்களே**

'நீங்களும் எழுதலாம் இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம் சந்தாதாரர் ஆவதோடு உங்களது நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவுங்கள் அன்பளிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை மலையும் இச்சை இராமர்களும்!

தானறியாத் தப்புக்காய்
கல்லாய் சமைத்தவள்
அந்த அகலிகை!

ஏதுமறியாது அன்று
அந்நியனிடம் ஏலம் போனதால்
சாபமிடப்பட்ட சந்ததியாய் நாம்!

மிதித்தவன் பாதத்தை
பதம்பார்த்து விட்டே
சித்தெறும்புகூட
மறுவேலை பார்க்கும்!

அத்தன்மைதானும்
அணுவளவு இருந்தாலே போதும்
விட்டு விடுதலை பெற!

பரம்பரை பரம்பரையாய்
உதைப்பவன் பாதத்தை
சிவனொளி பாதமாய்
உச்சியில் வைத்துக் கொண்டாடும்
பரமதிருப்திப் பனிமழையில் குளிக்கும்
பச்சை மலை!

சலுகைச் சாமரைக் காற்றை
வசந்தமாய் தென்றலாய் சுகித்து
இருகுகோதும் "காக்கா"ய்களாக
வாய்த்த தலைவர்கள்!

அப்பாவி அகலிகைக்குக் கூட
சாபவிமோசனம் கிட்டியது
சீத்தா இராமனால்!

கல்லாய் சமைந்து காட்சிதரும்
கொழுந்து மலைப் பெண்ணுக்கு
விமோசனம் தேடித்தர
எந்த இராமனையும்
இந்த நூற்றாண்டிலும் காணோம்!

விமோசன வில்லேந்தி
முடிசூடிவரும் நமது
நவீன இராமர்கள்
துச்சாதன பரம்பரையின்
பாதுகைகளை
சிம்மாசனமேற்றி பூசை செய்து
அணிசேர்ந்து எம்மையும்
காவடியெடுக்க அழைத்த படி!

-ஷெல்லிதாசன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்களம்

## இறுதித்தீர்ப்பு

புதைக்கப்பட்ட குழிகள் நடுவே
விதைக்கப்பட்ட விதைகள்
முளைக்கும் தருணம் எதிர்பார்த்து
நினைக்கப்படாத நிஜங்கள்
நுழைக்கப்படாத புலங்கள்
புவியீர்ப்பு விசைக்கெதிராய் மனதின்
போராட்டம்
கவலை நடுவே கதியற்று போனேன்
கர்மம் விளைத்த பலன் நடுவே
காரியம் செய்யஅறியேன்
பயனற்ற மரமாய்
பாரினில் வாழ தகுதியற்றுப் போனேன்

பூச்சியமாய் என்மனம் போகையிலே
பாஷைகள் புரியாது
உறவுகள் கருவேப்பிலையாய்
பிரசவித்தேன் மண்ணிலே
பிறர் சபிக்க ஏன் வாழ்கிறேன்
நன்றிகெட்ட மனிதரிடையே
நிதம் எதிர்பார்க்கிறேன் என் இறுதித்தீர்ப்பை...

ச.நிருஜன்,
தி/இ.கி.ச.இந்துக்கல்லூரி
13 உயிரியல்பிரிவு

## சொல்லிடங்கா நம்நாடு

உலக மாந்தர்களின்
சுற்றுலா தேசம்

சொல்லிடங்கா வளங்களும்
எண்ணிலடங்கா அதிசயங்களும்

இயற்கை எழிலா
செயற்கைத் தொழிலா

பொங்கும் ஆறா
பொழியும் அருவியா

புன்னகை மாந்தரா
பூத்திடும் புதுமையா

பஸ்லினா கலீல்
தரம் - 13, தி/அன்பதாஹ் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை கொடிது

வயதேழு இருக்கும்
சிறுமி அவள் நிலை
பாவம் ஐயோ
முகக்கூடு தெரியுதே
உடலை விட முகம் பெரிதாய்
அமைப்பில்லா உருவம் - அங்கே
தனிமைகளோடு நசிபடுதே
முடி என்று சொல்ல
செம்பட்டை தலையில்
விழி வெளித்தள்ளி
புதிதாய் ஐந்து
பூமி பார்க்க வந்ததோ

செல் அரிக்கா சட்டைதான்
இயற்கையின் கிழிசல்களுக்கு
இடங்கொடுத்ததே - அவள்
பரம்பரைச் சட்டை
ஆடை அது உடலை விட
வறுமை தனை
அழகாய் வெளிப்படுத்த
முதுமை அதன் நடுக்கம்
இளமையிற் கொடுத்தது யாரோ?

பஞ்சத்தின் தாய்
பெற்றெடுத்த முதற்பிள்ளை
தெருவிலே நிற்குதையோ
தேடுவார் யாரிங்கு
இவள் போல் எத்தனை பயிர்
வாடுது உலகில்

குமார் கார்த்தீபன், வவுனியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னதான் பேசுகிறார்?

காதிலே ஹெட்செட் போட்டு
வீதியிலே பேசுகிறார்.
வாகனத்தை ஓட்டிக் கொண்டு
வரம்பு மீறி பேசுகிறார்.

சாகத்தான் போகிறேன் - என்று
பந்தயம் கட்டிப் பேசுகிறார்
எமன் எதிரே நிற்பதைத்தான்
அறியாமல் பேசுகிறார்!

காதலி முன்னே நிற்பது போன்று
கனவில் ஆழ்ந்து பேசுகிறார்
பாதையில் திசைமாறியது புரியாமல்
பூரித்து பேசுகிறார்!

இறைவன் தந்த உயிரை தானே
இறைக்கத்தான் பேசுகிறார்
படைத்தவன் விதித்த திகதியின்
முன்னே
பழுதடைய பேசுகிறார்!

பக்கட் பிசாசு என்று அறிந்தும்
பவ்வியாய் பேசுகிறார் - அது
உயிரை எடுக்கும் என்று அறிந்தும்
உயிராக பேசுகிறார்!

பள்ளி செல்லும் பாலன் உட்பட
சல்லி தீர்த்து பேசுகிறார் - அவர்
என்னதான் பேசுகிறார் - என்று
எமன்தான் ஏசுகிறான்.

ச.திருச்செந்தூரன்
அன்புவழிபுரம்

கவிதை சம்பந்தமான குறிப்புக்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களோடு மொழிபெயர்ப்புக்கவிதைகளும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகை பூக்குமா?

பிறந்த கதை சிறுகதை
வளர்ந்த கதை இனியகதை
மலர்ந்த கதை புதியகதை
வாழ்ந்த கதை வரலாற்றுக்கதை

பட்டங்கள் பல சூட நினைத்தேன்
பதவி உயர்வு பெறவும் நினைத்தேன்
பாதி வழியினில்- என்
பயணம் முடியுமென நினைக்கவில்லை!
உண்மைகள் தொலைந்தன!
உறவுகள் பிரிந்தன!
துயரங்கள் அதிகரித்தன!
துணைகள் இழந்தன!

இனிவரும் பொழுதினிலாவது
வசந்தம் வருமா?
புன்னகை பூக்குமா?
புதுவாழ்வு தான் மலருமா?

கற்பு கண்ணகி வாழ்ந்த
கதை ஒரு கதை
பாஞ்சாலி பயணித்த
கதை ஒரு கதை

பதினான்கு வருடங்கள்
பட்ட வனவாச கதை
சீதை கதை - இத்தனை
கதையும் நானறிந்தேன்

இனியும் சோர முடியுமா?
இந்த தெய்வங்களே
சோதனைக்குள்ளான போதினில்
மானிடர் நாம் எம்மாத்திரம்
வேதனைகளையும் சோதனைகளையும்
எதிர் கொண்டே!
புதுயுகம் படைப்போம் பாரினிலே!

கவியன்னை,
நற்பிட்டிமுனை-02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலப் படுபவை

மேடு திருத்தி
பள்ளம் நிரவி
பாத்தி கட்டிப்
பயிரிட்டது போலும்
..........................
ஒரு காலம்
..........................
விளைந்தது போலும்
விளையாதது போலும்
வீடு வந்து சேராமையின்
விளங்காதது போலும்

ஓடிய வண்டி
அச்சாணி கழன்று
நின்றது போலும்
இருதலையில் நெருப்பெரிய
இடைநடுவே
அகப்பட்டது போலும்

சாண் ஏற முழம்
சறுக்கிற்று என்பது போலும்
சாண் இருக்கையில்
சந்தர்ப்பம் நழுவிற்று
என்பது போலும்

ஆதரித்தவர் போலும்
ஆதரியாதவர் போலும்
திடுக்கிட்டு போனோரும்
செய்வதறியாது
திகைத்துப் போனோரும்
போதுமென்போரும்
மீண்டெழும் என்பாரும்

கேள்விக் குறிகளுடன்
நிகழ்காலம்
கரைகிறது

போலப் படுபவற்றின்
பொய் உண்மை
தேர்ந்திடுங்கால் அன்றி
ஓர் காலும்
போயகலா
நம்மைப்பிடித்த இருள்

எஸ். ஆர். தனபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் எழுதலாம் இதழே!

நீ
வந்த பின்புதான்
தூர்ந்து போயிருந்த
கற்பனைக் கிணறுகள்
ஊற்றெடுக்கத் தொடங்கின.

பட்டமரத்தை
பசுமரமாக்கிய
வித்தையை
நீ
யாரிடத்தில்
கற்றுக் கொண்டாய்!
கன்னியாக் கிணறுகள்
வெந்நீரை மட்டுமே
சுரக்கின்றன.
தேன் கலந்த
அமுதத்தையல்லவா
நீ
சுரக்கின்றாய்!

மூடிய விழிகளை
திறக்கச் செய்யும்
தந்திரம் கற்ற
இருமாத இதழே!
என்றும்
இளமையாய் இருக்கும்
வல்லமை தரும்
ஞானப்பழத்தை
எப்போது உண்டாய்!
கருதந்து
அச்சகத்தில் உருதந்து
எழுத்தாளர்க்கு
உயிர்தந்தவள் நீ!

இயற்கையின் கீதம்பாடும்
துறைமுகத்தால் மட்டுமல்ல,
நீ
வருவதும்
இம்மண்ணுக்கும்
பெருமைதான்

மண்ணில் புதைந்து
உருமாறிப் போயிருந்த
ஒழுக்க விதைகள்
நீ போட்ட உரத்தால்
இன்று
மூச்சு விடுகின்றன.

—கே. எம். இக்பால் கிண்ணியா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கடிதம்

தங்களின் கவியேடு கண்டு மனம் நெகிழ்ந்தேன். புதிய பாணியில் சமகாலக் கருத்துக்களை உள்வாங்கி சிறப்புடன் சஞ்சிகை வருகிறது. எதிர்காலத்தில் அதன் வளர்ச்சி காத்திரமாக அமையுமென நம்புகிறேன்.


அன்புடன்
மருதூர் ஜமால்தீன்.

---

கடிதவழி தனி இதழைப்பெற விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான பத்து முத்திரைகளை அனுப்பவும். வருட சந்தா 300 ரூபா (தபாற் செலவு உட்பட) தபாலகம், திருகோணமலை.

முகவரி : எஸ்.ஆர்.தனபாலசிங்கம்
103/1, திருமால்வீதி, திருகோணமலை.

---




இவன் தான் மனிதன் (சிறுகதைத் தொகுதி) ஆசிரியர், சூசைஎட்வேட், 1004, அன்புழிபுரம், திருகோணமலை.
விலை 250/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Butterfly

**Chinua Achebe**

Speed is violence
Power is violence
Weight is violence

The butterly seeks safety in lightness
In weightless, undulating flight

But at a crossroads where mottled light
From trees falls on a brash new
highway
Our convergent territories meet

I come power-packed enough for two
And the gentle butterfly offers
Itself in bright yellow sacrifice
Upon my hard silicon shield.



**(born 16 November 1930 as Albert Chínåálåmígå Àchèbé)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணத்துப் பூச்சி

*சினுவா அச்செபே*

வேகம் என்பது வன்முறை
வலு என்பது வன்முறை
பாரம் என்பது வன்முறை

வண்ணத்துப் பூச்சி தனது இலகுத்
தன்மையில்
பாரமிலா அலைவான பறப்பிற்
பாதுகாப்பை நாடுகிறது

எனினும்
புதிய நெடுஞ்சாலையொன்றின் மேல்
மரங்களின் ஒளிப்புள்ளிக்கோலம்
விழும்
ஒரு திருப்ப மையத்தில்
நமது ஒருங்கும் பிரதேசங்கள்
சந்திக்கின்றன

இருவருக்குப் போதிய வலு நிரப்பி
நான் வருகிறேன்
மென்னயமான வண்ணத்துப் பூச்சி
எனது வன் கண்ணாடிக் கேடய மீது
பிரகாசமான மஞ்சள் நிவேதனமாகத்
தன்னை வழங்குகிறது

பெயர்ப்பு : சி. சிவசேகரம்

---

**வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்**
**வருட சந்தா 300/=**
R. Thanabalasingam
A/C No: 106653402077
Sampath Bank, Trincomalee.
**என வைப்பிட்டு பற்றுச்சீட்டை அனுப்பி வைக்கவும்**
**வெளிநாடு US $15**

**ISSN 1800-3311**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org